வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC 78/2017**

வழக்கு சாட்சி- **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | முருகானந்தம் | : | ஜாதி | |
| தந்தை பெயர் | ரத்தினசாமி | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | ராயராம்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 41/2023 |

(எதிரி ஆஜர் )

**நாள் : 21.12.2023**

**முதல் விசாரணை:** நான் ராயராம்பட்டி குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், அ.சா.1-ஐ தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:** கடந்த 18.04.2016-ம் தேதி அன்று காலை 9.30 மணியளவில் தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற இளநிலை கட்டளை நிறைவேற்றுநர் ஆன அ.சா.1 ஆஜர் எதிரியின் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு எதிரிக்கு சம்மன் சார்வு செய்தார் என்றால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி அவரை தகாத வார்த்தையினால் திட்டினார் என்றால் சரியல்ல. மேலும் கொலை மிரட்டல் விட்டார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியும் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** இல்லை.

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு )